TNTP150002472023

Presented on : 09-06-2023
Registered on : 09-06-2023
Decided on : 30-06-2026
Duration : 3 years, 0 months, 21 days

**உதவி அமர்வு நீதிமன்றம், துறையூர்**

**முன்னிலை.. திரு.C. விஜய் கார்த்திக், M.A., M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**துறையூர்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் செவ்வாய்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.139/2023**
**CNRNo.TNTP150002472023**
**முதல் விசாரணை வழக்கு (PRC)எண்.31/2022**
**(துறையூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்)**

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>உப்பிலியபுரம் காவல் நிலையம், உப்பிலியபுரம் காவல் நிலைய குற்ற எண்.175/2022 |
| அரசு தரப்பிற்காக | : | அரசு கூடுதல் வழக்கறிஞர்<br>திரு. V. ஜெயராஜூ |
| எதிரி பெயர் | : | மணிக்கம், வயது 60<br>த/பெ ராமசாமி,<br>பெரிய சித்தூர், பச்சமலை, தென்பறநாடு,<br>டாப் செங்காட்டுப்பட்டி அஞ்சல்,<br>துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம். |
| எதிரிக்காக | : | வழக்கறிஞர்<br>திரு.S. நவீன்குமார் |
| சம்பவ தேதி | : | 04.07.2022 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள். | : | 04.07.2022 |

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 17:59:31 +0530

| | | |
|---|---|---|
| முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்ட நாள் | : | 04.07.2022 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 05.07.2022 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 31.01.2023 |
| இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள். | : | 23.12.2022 |
| அமர்வு நீதிமன்றத்திற்கு துறையூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்தரவு நாள் | : | 09.05.2023 |
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் நாள் | : | எதிரிக்கு எதிராக இதச பிரிவு 341, 294(b), 323, 326, 307 -ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.<br>நாள் .. 19.07.2023 |
| எதிரியின் கோரிக்கை | : | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை. |
| விசாரணை தொடங்கிய நாள் | : | 14.02.2024 |
| விசாரணை முடிவடைந்த நாள் | : | 11.06.2026 |
| தீர்ப்பு நாள் | : | 30.06.2026 |
| நீதிமன்ற முடிவு | : | எதிரி இதச 341, 326 பிரிவின் கீழ் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| தீர்ப்புரை | : | இறுதியாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 341, 326-ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து இ.த.ச பிரிவு 341 -ன் கீழ் எதிரிக்கு 1 மாதம் சிறைதண்டனையும், இ.த.ச. பிரிவு 326-ன் கீழ் எதிரிக்கு 3 |

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 17:59:37 +0530

| | | |
|---|---|---|
| | | வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் ரூ.2000/- அபராதமும் அபராதத்தை கட்டத் தவறினால் 3 மாதங்கள் சிறைத்தண்டனையும், விதித்து கு.வி.மு.ச.பிரிவு 235(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மீது வனையப்பட்ட இதச சட்டப்பிரிகள் 294(b), 323, 307 -ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரி விடுதலை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சிறையில் இருந்த 05.07.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தை மேற்படி தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச 428-ன் படி கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி இரண்டு பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட தண்டணையும் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. |
| வழக்கு சொத்து குறித்த உத்தரவு | : | இவ்வழக்கில் R.P.No.2/2024-ல் கைப்பற்றப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 47 cm நீளமுள்ள அருவாள் -1 (அதில் மர கைப்பிடி நீளம் 18cm, இரும்பு பூன் 5 cm, அருவாளின் இரும்பு பகுதி 24 cm), சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரத்தம் படிந்த கருங்கல் -1 ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பு இறுதி விசாரணைக்காக இன்று 17.06.2026-ம் தேதியன்று வந்தபோது அரசு தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.V.ஜெயராஜூ அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. நவீன்குமார்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 17:59:42 +0530

அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், சாட்சியங்கள், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீர்ப்புரை

இவ்வழக்கின் எதிரிக்கும், புகார்தாரரான ராதிகா என்பவருக்கும், முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 04.07.2022 அன்று காலை 9 மணியளவில் புகார்தாரரும் அவரது கணவர் செல்லதுரையும் அவர்களது காட்டில் இருந்து விறகு எடுத்துக்கொண்டு சரவணன் என்பவரின் ஆட்டுக்கொட்டகை அருகே புகார்தாரர் முன்னால் செல்ல அவரது கணவர் செல்லதுரை பின்னால் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது புகார்தாரரை எதிரி மாணிக்கம் வழி மறித்து புகார்தாரரை பார்த்து தேவடியா புண்டா மகளே நான் சேர்த்து வச்ச சொத்த அனுபவிச்சுக்கிட்டு எனக்கு சோறு போடாம என் மகனிடம் என்னைப்பற்றி கேவலமாக சொல்லி என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டுட்டயேடி தேவடியா ஊரில் தலைகாட்ட முடியல என்று சொல்லி புகார்தாரரை கைகளால் அடித்து கீழே தள்ளிவிட்டு உடனே எதிரி நீயெல்லாம் உயிரோட இருக்கக்கூடாதுடி என்று சொல்லி கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டு அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கொடுவாளை எடுத்து இத்தோடு செத்து ஒழிந்து போ என்று சொல்லி புகார்தாரரின் வலது கணுக்காலில் ஓங்கி வெட்டி புகார்தாரருக்கு மரண காயத்தை ஏற்படுத்தியுள்ளார்.

எனவே, மேற்சொன்ன குற்றத்திற்காக எதிரி இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 326, 307-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என துறையூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.துறையூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு P.R.C. 31/2022 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, 207 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்த போது எதிரியின் குற்றச் செய்கை அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது எனக் கண்டு, வழக்கு கோப்பானது திருச்சி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.திருச்சி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் மேற்படி வழக்கை அமர்வு வழக்கு எண்.139/2023 என கோப்புக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கை பின்னர் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 17:59:49 +0530

கிடைக்கப் பெற்ற இவ்வழக்கில் இருதரப்பும் கேட்கப்பட்டு எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்று அனுமானிக்க போதிய காரணங்கள் இருப்பதாக தெரிய வரவே எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 326, 307-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து வினவப்பட்டபோது எதிரி மேற்படி குற்றச்சாட்டினை மறுத்து தான் குற்றவாளி அல்ல என கூறியுள்ளார். எனவே எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசு தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள், சான்று பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் விவரம்</u> : -**

4.அரசு தரப்பில் இவ்வழக்கில் காயம்பட்டவரும், புகார்தாரருமான ராதிகா அ.சா.1 ஆகவும், அ.சா.1-ன் கணவர் செல்லதுரை அ.சா.2 ஆகவும், செல்லதுரையின் சகோதரர் அ.சா.3 ஆகவும் சாட்சியமளித்துள்ளனர். மேலும் செல்லமுத்து என்பவர் அ.சா.4 ஆகவும், தமிழ்பாண்டியன் அ.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.4,5 சாட்சிகள் அரசு தரப்புக்கு எதிராக பிறழ் சாட்சிகளாக சாட்சியமளித்துள்ளனர். கிராம உதவியாளர் சதீஸ்வரன் அ.சா.6 ஆகவும், கிராம நிர்வாக அலுவலர் பன்னீர்செல்வம் அ.சா.7 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். துரைசாமி என்பவர் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். காவல் உதவி ஆய்வாளர் பிரகாஷ் என்பவர் அ.சா.9 ஆகவும், சம்பவத்தில் காயமடைந்த ராதிகாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுப்ரமணியன் என்பவர் அ.சா.10 ஆகவும், காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் என்பவர் அ.சா.11 ஆகவும், துறையூர் அரசு மருத்துவர் திரு. குமார் என்பவர் அ.சா.12 ஆகவும், விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் 16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு சா.பொ.1, 2 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>அரசு தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> :-**

(5.1)அ.சா.1 ராதிகா என்பவர் கடந்த 04.07.2022-ம் தேதி சம்பவம் குறித்து உப்பிலியபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்த அ.சா.ஆ.1 புகாரில் தன் கணவர் மற்றும் அவருடன் பிறந்த அண்ணன் சரவணன், தம்பி ரவிக்குமார் மூவருக்கும் தனது மாமனார் தனது சொத்துக்களை மூன்று ஏக்கர் வீதம் பிரித்து

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 17:59:53 +0530

கொடுத்துவிட்டார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தனது மாமனார் தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தார். அதனை தனது கணவரிடம் தெரிவித்ததால் தனது கணவர் தனது மாமனாரை கண்டித்தார். அதனால் தனது மாமனார் தங்கள் ஊரிலேயே தனியாக குடியிருந்து வந்தார். இந்நிலையில் தானும் தன் கணவரும் இன்று 04.07.2022 -ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் காட்டில் இருந்து விறகு எடுத்துக்கொண்டு சரவணன் ஆட்டுக்கொட்டாய் அருகே முனனாலும் தானும் தனக்கு பின்னால் தனது கணவரும் நடந்து வந்துகொண்டிருந்தபோது தன்னை தன் மாமனார் வழிமறித்து தன்னைப்பார்த்து தேவுடியா புண்டா மவளே நான் சேர்த்து வச்ச சொத்த அனுபவிச்சுக்கிட்டு எனக்கு சோறு போடாம தன் மகனிடம் தன்னை பற்றி கேவலமாக சொல்லி தன்னை வீட்டை விட்டு துரத்தி விட்டுட்டடி ஊரில் தலை காட்ட முடியல என்று சொல்லி என்ன கைகளால் அடித்து கீழே தள்ளிவிட்டார். அவர் அடித்து தள்ளியதில் தன் வலது புருவம் அருகே மூக்கு, மேல் உதட்டில் இரத்தக்காயம் ஏற்பட்டது. உடனே தன் மாமனார் நீயெல்லாம் உயிரோட இருக்க கூடாதுடி என்று சொல்லி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கொடுவாளை எடுத்து இத்தோடு செத்து ஒழிந்து போ என்று சொல்லி தன் வலது கணுக்காலில் ஓங்கி வெட்டினார் அவர் வெட்டியதில் தன் வலது கணுக்கால் துண்டாகி தொங்கியது. இதை பார்த்த தனது கணவரும் அங்கு நின்று கொண்டிருந்த சரவணனும் மற்றும் அக்கம் பக்கம் இருந்தவர்களும் சத்தம் போட்டு வரவே தன் மாமனார் அங்கிருந்து ஓடிவிட்டார். எனவே, எதிரி மாணிக்கம் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.2)அ.சா.1 ராதிகா என்பவர் திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அங்கிருந்து கிடைத்த தகவலை பெற்று அ.சா.9 பிரகாஷ் என்பவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த ராதிகாவிடம் வாக்குமூலம் பெற்று காவல் நிலையம் வந்து குற்ற எண்.175/2022 என 341, 294பி, 323, 326, 307 இ.த.ச படி அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். அ.சா.11 காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கு கோப்பை பெற்று அன்றைய தினம் காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.8 துரைசாமி, சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.9 பார்வை மகஜர், அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.2 செல்லதுரை, அ.சா.3 சரவணன், அ.சா.5 தமிழ்பாண்டியன், அ.சா.4 செல்லமுத்து, அ.சா.8 துரைசாமி, மற்றும் ஒரு சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் காலை 08.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சா.பொ.2 ரத்தம் படிந்த கருங்கல் ஒன்றை சாட்சிகள் அ.சா.8 துரைசாமி, பட்டியல் சாட்சி சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார்.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 17:59:58 +0530

பின்னர் சாட்சி ராதிகாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி சென்று காலை 10.30 மணிக்கு டாப்செங்காட்டுப்பட்டி பேருந்துநிலையம் அருகே வைத்து எதிரி மாணிக்கத்தை காரணம் கூறி கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் அ.சா.6 சதீஸ்வரன் , அ.சா.7 பன்னீர்செல்வம், ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

(5.3)பின்னர் 12.15 மணிக்கு பெரிய சித்தூரில் உள்ள சாமி தொம்பை அறையின் பின்புறம் உள்ள புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1 கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்று, மொத்த நீளம் 47 செ.மீ. மரக்கைப்பிடி நீளம் 18 செ.மீ. இரும்பு பூண் 5 செ.மீ. இரும்பு பகுதி 24 செ.மீ. உள்ளதை சாட்சிகள் அ.சா.6,7 பன்னீர்செல்வம், சதீஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.13 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் 05.08.2022 ம் தேதி இவ்வழக்கில் காயம் பெற்ற நபருக்கு சிகிச்சை அளித்த திருச்சி அட்லஸ் மருத்துவமனை மருத்துவர் அ.சா.10 திரு.சுப்ரமணியன் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் சொத்துக்களை அ.சா.ஆ.15 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். 15.08.2022 ம் தேதி உதவி ஆய்வாளர் பிரகாஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். அன்றைய தினமே வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரி மாணிக்கத்திற்கு எதிராக இதச பிரிவுகள் 341, 294(b), 323, 326, 307 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(5.4)அரசு தரப்பில் இவ்வழக்கில் காயம்பட்ட ராதிகா என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தான் சிகிச்சையிலிருக்கும்போது உப்பிலியபுரம் காவல் நிலையத்தினர் தன்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், புகாரிலுள்ள கைரேகை தன்னுடையது என தெரிவித்து புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த ராதிகாவின் கணவரும், எதிரியின் மகனுமான செல்லதுரை என்பவர் அ.சா.2 ஆக சாட்சியமளித்துள்ளார். சரவணன் என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவர் எதிரியின் மற்றொரு மகன் ஆவார். செல்லமுத்து, தமிழ்பாண்டியன் என்பவர்கள் முறையே அ.சா.4,5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவருமே தாங்கள் சம்பவத்தை பார்க்கவில்லை, போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளனர். தென்பறநாடு கிராம உதவியாளர் சதிஸ்வரன்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:03 +0530

என்பவர் அ.சா.6 ஆகவும், கிராம நிர்வாக அலுவலர் பன்னீர்செல்வம் என்பவர் அ.சா.7 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது குறித்தும், எதிரி பயன்படுத்திய கத்தியை கைப்பற்றியது குறித்தும், ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளனர். அசா.8 ஆக விசாரிக்கப்பட்ட துரைசாமி என்பவர் காவல் துறையினர் தயார் செய்த பார்வை மகசரிலும், கைப்பற்றுதல் மகசரிலும் கையெழுத்து செய்ததாக தெரிவித்துள்ளனர். அ.சா.9 பிரகாஷ் என்பவர் திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த ராதிகாவிடம் வாக்குமூலம் பெற்றது குறித்து சாட்சியமளித்துள்ளார். அவர் மூலம் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.10 திருச்சி அட்லஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.சுப்ரமணியன் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு, அ.சா.ஆ.8 காயச்சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. துறையூர் வட்ட காவல் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவர் அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பார்வை மகசர், மாதிரி வரைபடம், கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகசர்கள், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி, படிவம் 91 ஆகியவை முறையே அ.சா.ஆ.9 முதல் அ.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறயீடு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட ராதிகாவிற்கு முதலில் சிகிச்சை அளித்த துறையூர் சீனிவாசன் மருத்துவமனையின் எலும்பு முறிவு மருத்துவர் திரு.குமார் என்பவர் கூடுதல் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் அ.சா.ஆ.16 விபத்து பதிவேடு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(6.1)அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமான சாட்சியம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்டது. எதிரி மேற்படி சாட்சியத்தை மறுத்து பொய் வழக்கு என்றும், பொய் சாட்சி என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை தெரிவித்தார்.

(7.1)இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்பது அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 326, 307-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**தீர்வு..**

(8.1)அரசு தரப்பில் எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் கடந்த 04.07.2022 அன்று காலை 9 மணியளவில் புகார்தாரரும் அவரது கணவர் செல்லதுரையும் அவர்களது காட்டில் இருந்து விறகு எடுத்துக்கொண்டு சரவணன் என்பவரின் ஆட்டுக்கொட்டகை அருகே புகார்தாரர்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:08 +0530

முன்னால் செல்ல அவரது கணவர் செல்லதுரை பின்னால் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது புகார்தாரரை எதிரி மாணிக்கம் வழி மறித்து புகார்தாரரை பார்த்து தேவடியா புண்டா மகளே நான் சேர்த்து வச்ச சொத்த அனுபவிச்சுக்கிட்டு எனக்கு சோறு போடாம என் மகனிடம் என்னைப்பற்றி கேவலமாக சொல்லி என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டுட்டயேடி தேவடியா ஊரில் தலைகாட்ட முடியல என்று சொல்லி புகார்தாரரை கைகளால் அடித்து கீழே தள்ளிவிட்டு உடனே எதிரி நீயெல்லாம் உயிரோட இருக்கக்கூடாதுடி என்று சொல்லி கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டு அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கொடுவாளை எடுத்து இத்தோடு செத்து ஒழிந்து போ என்று சொல்லி புகார்தாரரின் வலது கணுக்காலில் ஓங்கி வெட்டி புகார்தாரருக்கு மரண காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டு எதிரி இதச 341, 294(b), 323, 326, 307 பிரிவுகளின் படி குற்றம் புரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் 12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் 16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு சா.பொ.1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(8.2)அரசு தரப்பு கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் வாதிடும்போது இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சம்பவ இட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் வழக்கு சம்பவத்தை பற்றி தெளிவாகவும், கோர்வையாகவும் சாட்சியளித்துள்ளதாகவும், அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் குறித்து அ.சா.10 மற்றும் 12 மருத்துவர்கள் விபத்து பதிவேடு, காயச்சான்று வழங்கி காயத்திற்கு சிகிச்சை அளித்தது குறித்தும் காயத்தின் தன்மை குறித்தும் தெளிவாக சாட்சியமளித்துள்ளதாகவும், அ.சா.1-க்கு ஏற்பட்ட காயங்கள் எவ்வகையில் ஏற்பட்டிருக்கும் என்பதை எதிரி தரப்பில் நிரூபணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், எதிரியின் குற்ற செய்கையானது அ.சா.1-க்கு மரண காயம் ஏற்படும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ.1 அருவாள் குறித்து ஒப்புதல் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.6 மற்றும் 7 முதல் விசாரணை தொடர்ச்சியில் தெளிவாக சாட்சியமளித்துள்ளதாகவும், எதிரியின் குற்றச்செய்கை குறித்து அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பு சாட்சிகள் ஒன்றோடு ஒன்று பொருந்தும் விதமாக வேறுபாடின்றி சாட்சியமளித்துள்ளனர் என்றும், மேலும் அரசு தரப்பு சாட்சிகள் நம்பகத்தன்மையான சாட்சிகள் எனவும், அவர்கள் எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்து சாட்சியமளிக்க தேவையில்லை எனவும், அரசு தரப்பு வழக்கு சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரியின் குற்ற செய்கைக்கு பிரிவு 341, 294(b), 323, 326, 307 இதச படி அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:13 +0530

(8.3)எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அ.சா.1 நீதிமன்ற முதல் விசாரணையில் புகார் வாக்குமூலத்தில் கூறாத சங்கதிகளான எதிரி கல்லால் அடித்தார் எனவும், வலதுபுற கண்ணில் அடித்தார் எனவும், மேல் உதட்டில் ரத்தம் வந்தது என புதிய சங்கதிகளை தெரிவித்துள்ளார் எனவும், புகார் வாக்குமூலத்தில் எதிரி பயன்படுத்திய ஆயுதம் கொடுவாள் எனவும், முதல் விசாரணையில் கத்தி எனவும், மாறுபட்ட சங்கதிகளை கூறியுள்ளார் எனவும், அரசு தரப்பு வழக்கு சொத்தை அ.சா.1-யிடம் காட்டி உறுதி செய்யவில்லை எனவும், சம்பவ சமயத்தில் அ.சா.2,3 சம்பவ இடத்தில் இருந்ததாக புகாரில் கூறிவிட்டு நீதிமன்றத்தில் இல்லை என மாற்றி சாட்சியளித்துள்ளதாகவும், அ.சா.2,3 சாட்சிகள் சம்பவ இட சாட்சிகள் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்ததாகவும், ராதிகா காலில் வெட்டுபட்டு ரத்தத்துடன் கிடந்தார் என சாட்சியமளித்துள்ளனர் எனவும், சாட்சியமளித்துள்ளனர். அ.சா.4 மற்றும் 5 பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ளனர். அ.சா.6 முதல் 8 மகசர் சாட்சிகள். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியாக சாட்சியமளித்துள்ளதாகவும், அ.சா.9 முதல் தகவலறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில் புகார்தாரர் கையொப்பம் செய்த புகார் உள்ளதாக சந்தேகத்திற்கிடமாக சாட்சியமளித்துள்ளதாகவும், அ.சா.10 மருத்துவர் அதிக எடையுடன் கூடிய விறகு கட்டைகளை எடுத்து வரும்போது கீழே விழும்போது காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள 1,2 காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சாட்சியமளித்துள்ளதாகவும், அ.சா.11 புலன்விசாரணை அதிகாரி இரத்த மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பவில்லை எனவும், அருவாளில் எதிரியின் கைரேகை இருந்ததா என ஆய்வு செய்யவில்லை எனவும், அரசு தரப்பில் அ.சா.1-க்கு முதல் சிகிச்சை அளித்த சீனிவாசன் மருத்துவமனை மருத்துவரை சாட்சி பட்டியலில் சேர்த்து விசாரிக்காமல் எழுத்துமூலமான வாதுரை கொடுத்த பிறகு விசாரித்துள்ளனர் எனவும், சா.பொ.1 அருவாளை அ.சா.1, 6,7 ஆகிய சாட்சிகளிடம் காண்பித்து முதல் விசாரணையில் நிரூபணம் செய்யவில்லை எனவும், அ.சா.1 ஐ தவிர வேறு கண்ணுற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை எனவும், அ.சா.1 -க்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் அ.சா.10 மருத்துவர் மூலம் பெறப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், ஆகையால் எதிரிக்கு சந்தேகத்தின் பலனை வழங்கி விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

(8.4)இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " ஆஜர் எதிரியை தெரியும். 04.07.2022ம் தேதி காலை 9.00 மணிக்கு நானும் என் கணவரும் விறகை தலையில் எடுத்து கொண்டு வந்தோம். என் மாமா சரவணன்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:18 +0530

ஆட்டுபட்டிக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார் என் மாமனார் மாணிக்கம் என்னை தேவடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். இனிமேல் நீ உயிரோடு இருக்க கூடாது என்றும், இன்றோடு நீ செத்து ஒழிய வேண்டும் என்றும் சொன்னார். பின்பு கல்லால் என்னை அடித்தார். வலது புற கண்ணில் அடித்தார். மேல் உதட்டில் எல்லாம் ரத்தம் வந்தது. ரத்தம் வந்ததால் மயங்கி விட்டேன். மாமனார் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து வலது காலை வெட்டி விட்டு காலை தனியாகவே போய்விட்டது. அப்போது என் பெரிய மாமா சரவணன், என் கணவர் எல்லாம் அக்கம் பக்கத்தில் அழைத்து என்னை ஒரு வண்டியில் வைத்து துறையூர் சீனிவாசன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கே சரி செய்ய முடியாது என்பதால் திருச்சி அட்லஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சிசிக்சையில் நான் இருக்கும்போது உப்பிலியபுரம் போலீசார்வந்து என்னை விசாரித்தார்கள், நடந்ததை சொன்னேன். புகார் நான் தான் கொடுத்தேன். புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான்." என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " எனக்கு ஏற்பட்ட மயக்கம் எப்போது தெரிந்தது என்றால் உடனே தெரிந்துவிட்டது. சம்பவம் நடக்கும்போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்களா என்றால் சம்பவம் முடிந்தபிறகு வந்தார்கள். அக்கம்பக்கம் வீட்டிலிருந்த அல்லிமுத்து, சதீஷ், அசோக், மயிலி, சங்கர், செந்தில், சுப்ரமணி, சரவணன் ஆகியோர்கள் சம்பவம் முடிந்தபிறகு வந்தார்கள். நான் கையெழுத்து போடுவேன். அன்று முடியாததால் கைரேகை வைத்தேன்." என சாட்சியமளித்துள்ளார்.

(8.5)அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் எதிரிக்கும் தனக்கும் என்ன முன்விரோதம் இருந்தது என்பது பற்றி தெரிவித்தும் எதிரி தன்னை வழி மறித்து கெட்ட வார்த்தையால் திட்டி அ.சா.1- தான் தன்னை வீட்டைவிட்டு துரத்தியடித்தார் எனவும், அவரால் ஊரில் தலைகாட்ட முடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்து கைகளால் அடித்து கீழே தள்ளியதாகவும், அதனால் தனக்கு வலது புருவம் அருகே, மூக்கு, மேல் உதட்டில் ரத்த காயம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். ஆனால் நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 தனக்கும் எதிரிக்கும் உள்ள முன் விரோதம் குறித்து தெரிவிக்காமல் எதிரி தன்னை இனிமேல் நீ உயிருடன் இருக்க கூடாது என்றும் இன்றோடு செத்து ஒழிய வேண்டுமென கூறி கல்லால் தன்னை அடித்ததாக மட்டும் தெரிவித்துள்ளார். பிறகு அ.சா.1 தனது முதல் விசாரணையில் எதிரி இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து வலது காலை வெட்டிவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். புகார் வாக்குமூலத்தில் எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கொடுவாளை எடுத்து வலது கணுக்காலில் வெட்டியதால் கணுக்கால் துண்டாகி தொங்கியதாகவும், அதை தன் கணவரும் அங்கு நின்று கொண்டிருந்த சரவணனும் பார்த்ததாக தெரிவித்துள்ளார். அக்கம் பக்கத்தினர் சத்தம்போட்டு வரவே எதிரி ஓடியதாக தெரிவித்துள்ளார்.

C VIJAY KARTHIK Digitally signed by C VIJAY KARTHIK Date: 2026.06.30 18:00:24 +0530

(8.6)அரசு தரப்பில் அ.சா.1 யிடம் முதல் விசாரணையின்போது இவ்வழக்கில் கைப்பற்றியுள்ள அருவாளை காட்டி உறுதி செய்யவில்லை. ஆகையால் அ.சா.1 ஐ மீண்டும் விசாரிக்க மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1 சாட்சியமளிக்க நீதிமன்றத்திற்கு வராததால் அவரது சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. அ.சா.1-யிடம் குறுக்கு விசாரணையிலும் சம்பவ சாட்சிகள் சம்பவம் முடிந்த பிறகு வந்ததாக தெரிவித்துள்ளார்.

(8.7)அ.சா.1-ன் கணவரான அ.சா.2 முதல் விசாரணையில் "ஆஜர் எதிரியை தெரியும். 04.07.2022 தேதி நானும் என் மனைவியும் காலை 8.30 மணியிலிருந்து 9.00 விறகு எடுக்க சென்றோம். என் மனைவி எனக்கு முன்பு சென்றார், நான் அதிக எடையுள்ள விறகை சுமந்து வந்ததால் நான் பின்னால் வந்தேன். அப்போது அலறல் சத்தம் கேட்டது யார் என்று குரல் கொடுத்தேன். வந்து பார்க்கும்போது என் மனைவி ரத்த காயங்களுடன் கீழே கிடந்தார். ஆஜர் எதிரி அருவாளுடன் சென்று கொண்டிருந்தான். பின்பு என் மனைவியை அழைத்து வந்து டாப் செங்காட்டு பட்டி அரசு மருத்துமனையில் சேர்த்தேன். பின்பு துறையூர் சீனிவாசன் மருத்துவமனைக்கு வந்தோம், காலை எடுத்துவிடுங்கள் என்றார், பின்பு திருச்சி அட்லஸ் மருத்துவமனைக்கு சென்றோம். முடியாது என்று சொன்னார்கள், பின்பு காலை இணைத்து அறுசை சிசிக்சை செய்தார்கள்.” என்று சாட்சியமளித்துள்ளார்.

(8.8)அ.சா.3 முதல் விசாரணையில் "ஆஜர் எதிரி என் அப்பா சம்பவம் நடந்த அன்று பார்த்தேன் அதற்கு பிறகு இப்ப தான் பார்க்கிறேன். தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. சுமார் 3 வருடத்திற்கு முன்பு நான் விவசாயம் செய்தேன் காட்டில் இருந்தேன். காட்டில் இருந்து வரும்போது என் தம்பி அவன் பொண்டாட்டியை தூக்கி அழுது கொண்டு இருந்தான், யார் என்னவென்று கேட்டேன், மருத்துவமனையில் என் தம்பி மனைவிக்கு சிகிச்சை அளித்த பிறகு யார் வெட்டினார் என்று கேட்ட போது உங்க அப்பா தான் வெட்டினார் என்று சொன்னார்.” என சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 குறுக்கு விசாரணையில் "சம்பவம் நடக்கும் போது நான் காட்டில் இருந்தேன் என்றால் ஆமாம்.மலையில் இருந்து விறகுகளை தலையில் சுமந்து வரும் போது கீழே விழ வாய்ப்பு இருக்குமா என்றால் வாய்ப்பு இருக்கும். நான் போகும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ஒரு 10 நபர்கள் இருந்தார்கள். ” என சாட்சியமளித்துள்ளார்.

(8.9)அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது முதல் விசாரணையில் "சுமார் 2 வருடங்களுக்கு முன்பு யார் யாரை வெட்டினார்கள் என்று தெரியாது, வயலுக்கு போய்விட்டு வந்தோம், சம்பவத்தை பார்க்கவில்லை என பிறழ் சாட்சிகளாக சாட்சியமளித்துள்ளனர்.

(8.10)அ.சா.6 முதல் விசாரணையில் "செங்காட்டுப்பட்டியில் மாணிக்கம் என்பவரை பிடித்து வைத்திருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நானும்

C VIJAY KARTHIK Digitally signed by C VIJAY KARTHIK Date: 2026.06.30 18:00:32 +0530

VAO வும் அந்த இடத்திற்கு சென்றோம். போன போது மாணிக்கம் தன் மருமகளை காலை வெட்டி விட்டதாக சொன்னார்கள். அவர் பயன்படுத்திய கொடுவாளை பெரியசித்தூர் சாமி கோவில் அருகே ஒரு புதரில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். ” என சாட்சியமளித்துவிட்டு மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சியில் “05.07.2022ம் தேதி நானும் கிராம நிர்வாக அலுவலர் பன்னீர்செல்வமும் பெரியசித்தூரில் ஒரு முள்புதரில் இருந்து போலிஸார் கைப்பற்றிய அருவாளை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அருவாளை தான் போலிஸார் அன்று கைப்பற்றினார்கள் ” என சாட்சியமளித்துள்ளார்கள்.

(8.11)அ.சா.7 முதல் விசாரணையில் " 7வது மாதம் 2022ம் வருடம் தேதி ஞாபகமில்லை. அன்று காலை 9 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து எங்களுக்கு போன் செய்தார்கள். எங்கள் பஞ்சாயத்தில் யாரையோ வெட்டி விட்டார்கள் ஆளை பிடித்து வைத்திருக்கிறோம் நீங்கள் வாருங்கள் என்று சொன்னார்கள். உடனே நானும் கிராம உதவியாளரும் தென்புறநாடுக்கு கிராமம் சென்றோம். ஊர் பெயர் டாப்செங்காட்டுப்பட்டி. நாங்கள் போகும் போது 10, 10.30 மணி இருக்கும். மாணிக்கம் என்பவர் அங்கே இருந்தார். சம்பவத்தை கேட்டோம் ஆமாம் என்று சொன்னார் அவர் வைத்திருந்த கத்தியை பக்கத்து கிராமத்தில் கோவில் பெயர் தெரியாது கோவில் பக்கத்தில் வைத்திருப்பதாக சொன்னார். நான், கிராம உதவியாளர், காவல் துறை எல்லாம் அந்த இடத்திற்கு சென்று கத்தியை எடுத்து ஸ்டேசனுக்கு வந்தோம் கையெழுத்து போட்டு கொடுத்தேன்" என சாட்சியமளித்துவிட்டு மீண்டும் அழைத்து முதல் விசாரணை தொடர்ச்சியில் "என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அருவாளை தான் போலிஸார் கைப்பற்றினார்களா என்றால் ஆமாம். சா.பொ.1 கைப்பற்றும்போது என்னுடன் கிராம நிர்வாக உதவியாளர் சதிஸ்வரன் இருந்தார். உப்பிலியபுரம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இருந்தார். ஆஜர் எதிரி தான் கொடுவாளை எடுத்து கொடுத்தார்.” என சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 மற்றும் 7 தங்களது குறுக்கு விசாரணையிலும் 05.07.2022 -ம் தேதி எதிரி முன்னிலையில் சான்று பொருள் 1 அருவாள் கைப்பற்றியது குறித்து தாங்கள் இருவரும் தங்கள் அலுவலகத்திலிருந்து கிளம்பி சென்றது குறித்தும், அங்கு காவல் துறையினர் முன்னிலையில் சா.பொ.1 கைப்பற்றியது குறித்து சந்தேகத்திற்கிடமில்லாமல் சாட்சியமளித்துள்ளார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அருவாள் கைப்பற்றப்பட்டு எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.11 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(8.12)அ.சா.8 முதல் விசாரணையில் "சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கம் என்பவர் தன் மருமகளை வெட்டிவிட்டார் என்று தகவல் கேள்விபட்டேன்.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:38 +0530

நான் வயலில் வேலை பார்த்து கொண்டிருந்தேன் தகவல் கேள்விபட்டு நானும் ஓடிவந்தேன், போலிஸார் வந்தார்கள், வந்ததற்காக ஒரு கையெழுத்து போடு என்று சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன்.பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து.” என சாட்சியமளித்துள்ளார். அ.சா.8 பார்வை மகசர் மற்றும் சா.பொ.2 ஆன ரத்தம் படிந்த கருங்கல் கைப்பற்றப்பட்ட மகசர் சாட்சி ஆவார்.

(8.13)அ.சா.9 காவல் உதவி ஆய்வாளர் திரு.பிரகாஷ் தனது முதல் விசாரணையில் "04.07.2022ம் தேதி திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் உள்ள தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த ராதிகா வயது 31 க/பெ. செல்லதுரை சித்தூர் தென்புறநாடு ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தில் பெயரில் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.175/2022 என 341, 294பி, 323, 326, 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.” என சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 குறுக்கு விசாரணையில் "புகார்தாரர் ராதிகா வாக்குமூலம் கொடுக்கும்போது நல்ல நிலைமையில் இருந்தார் என்றால் சரிதான். நான் போகும்போது புகார்தாரருக்கு அறுவைசிகிச்சை முடியவில்லை. புகார் வாக்குமூலம் எப்படி பதிவு செய்யப்பட்டது என்றால் அவர் கூறினார் நான் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் கொடுக்கும் புகார்தாரர் கையொப்பம் செய்தார். புகார்தாரர் கையொப்பம் செய்த புகார் வாக்குமூலம் தான் உண்மையான வாக்குமூலம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் புகார்தாரரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான்.” என சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.1 புகார்தாரர் தன்னால் கையெழுத்து செய்ய முடியாத நிலையில் இருந்ததால் கைரேகை வைத்து புகார் கொடுத்ததாக தெளிவாக சாட்சியமளித்துள்ளார்.

(8.14)அ.சா.10 திருச்சி அட்லஸ் மருத்துவமனையின் மருத்துவர் திரு.சுப்ரமணி தனது முதல் விசாரணையில் "கடந்த 04.07.2022 தேதி திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் பணியில் இருந்த போது ராதிகா என்கின்ற 31 வயதுடைய பெண் காலை 11.00 மணியளவில் அவருக்கு தெரிந்த ஒரு நபரால் அருவாள் மற்றும் கற்களால் தாக்கப்பட்டதாக கூறி 02.15 மணியளவில் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1. வலது கீழ் கால் கிட்டத்தட்ட துண்டாகிவிட்ட நிலையில் இருந்தது. 2. வலது கீழ்காலில் உள்ள நரம்புகள் ரத்த குழாய்கள் மற்றும் இரண்டு எலும்புகளும் துண்டாகி காணப்பட்டன. 3. 5x2x2 cm அளவில் வலது தலைபகுதியில்ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 4. 2x2 cm அளவில் வலது கட்டைவிரலில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 5. 2cm மேல் உதட்டில் வெட்டுக்காயம் காணப்பட்டது. 6. 3x2 cm அளவில் வலது கையில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அவருக்கு xray பரிசோதனை செய்து பார்த்ததில் வலது காலில் உள்ள இரண்டு எலும்புகளும்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:44 +0530

உடைந்து காணப்பட்டன. அவருக்கு ஏற்பட்டுள்ள காயம் எண். 1 மற்றும் 2 கொடுங்காயம் என்று சான்றளித்தேன். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 20.07.2022 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். ” என சாட்சியமளித்துள்ளார்.

(8.15)அ.சா.10 குறுக்கு விசாரணையில் "காயம் பெற்ற நபர் மருத்துவமனைக்கு வரும்போது சுயநினைவோடு தான் இருந்தார். காயம் பெற்ற நபருக்கு அதிக ரத்தபோக்கு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் மயக்கமடைய வாய்ப்பு உள்ளது. இந்த வழக்கில் காயம் பெற்றவருக்கு அதிக ரத்தபோக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது. சம்பவம் மலைப்பகுதியில் நடைபெற்றுள்ளதால் காயம்பட்டவர் அதிகப்படியான எடையுள்ள விறகுகட்டைகளை எடுத்துவரும்போது நிலை தடுமாறி கீழேவிழும்போது நான் குறிப்பிட்ட 1, 2 காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது எனவும், காயம்பட்டவர் விறகு கட்டையுடன் கீழே விழுந்ததால் தான் மேற்படி காயங்கள் ஏற்பட்டது எனவும், விபத்து பதிவேட்டில் நான் கூறியுள்ளதுபோல் அவருக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல" என மறுத்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.1-க்கு வலது காலில் ஏற்பட்ட வெட்டு காயம் அ.சா.10 மருத்துவரின் சாட்சியம் மற்றும் அ.சா.1-ன் முதல் விசாரணை சாட்சியத்துடன் ஒத்தி காணப்படுகிறது. மேலும் அ.சா.7 மற்றும் 8 விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் மூலம் அ.சா.1-ற்கு ஏற்பட்ட மேற்படி வலது கால் வெட்டு காயம் கொடுங்காயம் என நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

(8.16)அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட துறையூர் சீனிவாசன் மருத்துவமனையில் எலும்புமுறிவு மருத்துவராக பணிபுரியும் மருத்துவர் குமார் தனது முதல் விசாரணையில் "கடந்த 04.07.2022 ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் 31 வயது மதிப்புத்தக்க ஒரு பெண் தன்னை தெரிந்த நபர் அரிவாளால் தாக்கப்பட்டதாக கூறி என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்ததில் வலது கணுக்காலில் 10x6x5 செ.மீ அளவில் எலும்புமுறிவு மற்றும் இரத்தநாளங்கள் மற்றும் நரம்புகள் கிழிந்த நிலையில் காணப்பட்டது. அந்த காயங்கள் கடுமையான காயங்கள் என்பதால் அவரை மேல்சிகிச்சைக்காக திருச்சி அட்லஸ் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். சா.பொ.1 அருவாள் மூலம் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.” என சாட்சியமளித்துள்ளார். இவர் மூலம் சீனிவாசன் மருத்துவமனையில் அ.சா.1-க்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.12 தனது குறுக்கு விசாரணையில் போலிஸாருக்கு நான் சுமார் 1 மணியளவில் தகவல் கொடுத்தேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள். போலிஸார் விசாரணையில் விபத்து பதிவேடு ஏன் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் சம்பவத்தை பற்றி மட்டும் கேட்டார்கள். மலைப்பகுதியில் அதிக எடையுடன்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:50 +0530

செல்லும்போது கீழே விழுந்தால் நான் சொன்ன மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. அடிப்பட்டவர் மருத்துவமனைக்கு வந்தவுடன் ½ மணி நேரத்தில் மேல்சிகிச்சைக்காக திருச்சி அட்லஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் அடிப்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரியல்ல முதலுதவி செய்து தான் அனுப்பினேன்." என சாட்சியமளித்துள்ளார். அ.சா.10 மற்றும் 12 மருத்துவர்கள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1-க்கு ஏற்பட்ட வலது கணுக்கால் வெட்டுக்காயம், கொடுங்காயம் எனவும், அந்த காயம் கீழே விழுவதால் ஏற்பட வாய்ப்பில்லை என உறுதிபடுத்தி சாட்சியமளித்துள்ளனர்.

(8.17)அ.சா.ஆ-7 மற்றும் 8 மருத்துவ ஆவணங்களான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழை பரிசீலனை செய்ததில் அ.சா.1 ராதிகாவை அவரது கணவர் செல்லதுரை அட்லஸ் மருத்துவமனையில் 04.07.2022-ம் தேதி மதியம் 2.15 மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்துள்ளார் என்றும், அவருக்கு 20.07.2022 வரை சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது என்பதும், வலது கீழ் கால் கிட்டத்தட்ட துண்டாகிவிட்ட நிலையில் இருந்தது எனவும், வலது கீழ் காலில் உள்ள நரம்புகள், ரத்த குழாய்கள் மற்றும் இரண்டு எலும்புகளும் துண்டாகி காணப்பட்டன எனவும், காயச்சான்றிதழில் தெரிவிக்கப்பட்டு மேற்படி காயங்கள் கொடுங்காயங்கள் என சான்று வழங்கப்பட்டுள்ளது என்பது அறியமுடிகிறது. அ.சா.ஆ.16 சீனிவாசன் மருத்துவமனையில் அ.சா.1-க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் அ.சா.1 ஐ அடையாளம் தெரிந்த நபர் அரிவாளால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டு 04.07.2022-ம் தேதி சிகிச்சைக்காக அவரது கணவர் மருத்துவமனையில் சேர்த்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(8.18)அ.சா.11 துறையூர் வட்ட காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் தனது முதல் விசாரணையில் "உப்பிலியபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.பிரகாஷ் அவர்கள் பதிவு செய்த நிலைய குற்ற எண்.175/2022 சட்டப்பிரிவுகள் 341, 294b, 323, 326, 307 இதச வின்படியான முதல் தகவல் அறிக்கையை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினம் காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரைசாமி, சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.சாட்சிகள் செல்லதுரை, சரவணன், தமிழ்பாண்டியன், செல்லமுத்து, துரைசாமி, சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காலை 08.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று ரத்தம் படிந்த கருங்கல் ஒன்றை சாட்சிகள் துரைசாமி, சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். எதிரியை தேடி சென்று காலை 10.30 மணிக்கு டாப்செங்காட்டுப்பட்டி பேருந்துநிலையம் அருகே வைத்து எதிரி மாணிக்கத்தை காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:00:55 +0530

வாக்குமூலத்தினை சாட்சிகள் பன்னீர் செல்வம், சதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 12.15 மணிக்கு பெரிய சித்தூரில் உள்ள சாமி தொம்பை அறையின் பின்புறம் உள்ள புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்று, மொத்த நீளம் 47 செ.மீ. மரக்கைப்பிடி நீளம் 18 செ.மீ. இரும்பு பூண் 5 செ.மீ. இரும்பு பகுதி 24 செ.மீ. உள்ளதை சாட்சிகள் பன்னீர்செல்வம், சதீஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.பின்னர் 05.08.2022 ம் தேதி இவ்வழக்கில் காயம் பெற்ற நபருக்கு சிகிச்சை அளித்த திருச்சி அட்லஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.சுப்ரமணியன் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.புலன்விசாரணை முடித்து எதிரி மாணிக்கத்திற்கு எதிராக இதச பிரிவுகள் 341, 294b, 323, 326, 307 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். ” என சாட்சியமளித்துள்ளார்.

(8.19)இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(b) குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. இதச பிரிவு 294(b)-ன் படி யாரேனும் மற்றவருக்கு பொது இடத்தில் ஆபாசமான வார்த்தைகளை கொண்டு பேசியும், பாடியும், திட்டியும், அவருடைய கௌரவத்தை பொதுமக்கள் முன்னிலையில் கலங்கப்படுத்தும் விதத்தில் செய்யும் குற்றத்திற்கு தண்டனை வழங்குவது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.சா.1 எதிரி தன்னை தேவடியா என திட்டியதாக தெரிவித்துள்ளார். அ.சா.3 சவரணன் ஆட்டுப்பட்டிக்கு முன்னால் நின்று கொண்டிருந்ததாக தெரிவித்துள்ளார். சம்பவம் நடக்கும்போது சம்பவ இடத்தை அக்கம் பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் வரவில்லை எனவும், சம்பவம் முடிந்து வந்ததாக குறுக்கு விசாரணையில் தெரிவித்துள்ளார். அ.சா.ஆ.10 மாதிரி வரைபடத்தில் சம்பவம் சரவணன் ஆட்டுக்கொட்டாய்க்கும் சுப்ரமணியன் வீட்டிற்கும் நடுவில் உள்ள காலியிடத்தில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு வடக்கு பகுதியில் ரோடும், சம்பவ இடத்திற்கு மேற்கு புறத்தில் வீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி கெட்ட வார்த்தையால் திட்டியதால் அ.சா.1-ன் கௌரவம் பொதுமக்கள் முன்னிலையில் கலங்கப்பட்டதாக எவ்வித சாட்சியமும் இல்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2026 INSC 318 Criminal Appeal No.1807 of 2019 Sivakumar Vs. State Represented by the Inspector of Police என்ற வழக்கின் முன்தீர்ப்பில் Section 294(b) IPC- Mere use of the word ‘bastard’ by itself, is not sufficient to arouse prurient interest of a person- such words are commonly used in modern era during heated conversations – Conviction under section 294(b) IPC set aside. என தெரிவிக்கப்பட்டு பொதுவாக சில கெட்ட வார்த்தைகள் வழக்கத்தில் பேசுவதில் மட்டுமே இதச பிரிவு 294(b)-ன் படி எதிரிக்கு தண்டனை வழங்க போதுமானதாக இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச 294(b)

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:00 +0530

பிரிவின் கீழ் தண்டனை வழங்க அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1-ன் சாட்சியம் மற்றும் சம்பவ இடம் பொது இடமாக இல்லாமல் உள்ளதாலும் எதிரி அ.சா.1 ஐ திட்டும்போது யாரும் அருகில் இல்லாததாலும் மேற்படி பிரிவின் கீழ் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 294(b) குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(8.20)எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 341, 323, 326, 307 பிரிவுகளின் கீழ் எதிரியை தண்டிக்க அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் சான்று பொருட்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்கையில் அ.சா.1 எதிரி தன்னை சம்பவ தினத்தன்று விறகை தலையில் எடுத்து வந்தபோது திட்டி உயிருடன் இருக்க கூடாது என கூறி கல்லால் அடித்ததாகவும், பின் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து வலது காலை வெட்டியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். ஆகையால் அ.சா.1 ஐ எதிரி வழிமறித்துள்ளார் என்பது அவரது சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகிறது. அ.சா.1-க்கு ஏற்பட்ட சாதாரண காயங்கள் எதிரி கீழே தள்ளியதால் ஏற்பட்டது என புகார் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 எதிரி தன்னை கல்லால் அடித்ததால் ஏற்பட்டது என முரண்பட்டு சாட்சியளித்துள்ளதால் அ.சா.1-க்கு ஏற்பட்ட சாதாரண காயங்கள் குறித்து அ.சா.1 அளித்துள்ள சாட்சியம் முரண்பட்ட நிலையில் உள்ளதாலும், சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் சம்பவம் நடைபெற்றது குறித்து தங்களுக்கு சம்பவம் நடந்த பிறகு தான் தெரியவந்ததாக சாட்சியளித்துள்ளதாலும், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச 323 பிரிவின்படி எதிரியை தண்டிக்க போதுமான சாட்சியம் சந்தேகத்திற்கிடமில்லாமல் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச 307 பிரிவின்படி எதிரிக்கு தண்டனை வழங்க எதிரி அ.சா.1 ஐ செத்து ஒழிய வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கியதாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளார். ஆனால் எதிரிக்கும் அ.சா.1-க்கும் உள்ள முன்விரோதம் குறித்து எவ்வித சாட்சியமும் நீதிமன்றத்தில் அ.சா.1 தெரிவிக்கவில்லை.

(8.21)எதிரிக்கு அ.சா.1 ஐ கொலை செய்ய வேண்டுமென்ற உள்நோக்கம் எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து அ.சா.1 நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. எதிரியின் குற்ற செய்கை காயம்பட்டவருக்கு மரணத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கும் பட்சத்தில் எதிரியின் செய்கையால் மரணம் ஏற்பட்டிருந்தால் அவர் மரணத்தை ஏற்படுத்திய குற்றத்தின் தண்டனைக்கு உள்ளாவார் என்பது அவர் அறிந்திருக்கும் பட்சத்தில் எதிரியை கொலை முயற்சிக்கான குற்றத்திற்கு தண்டிக்கலாம் என சட்டப்பிரிவு 307 இதசவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.சா.1 எதிரி தன்னை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் தாக்கியதாக தெரிவித்திருந்தாலும் எதிரியின் குற்ற செய்கையானது

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:05 +0530

அ.சா.1 -ன் வலது கீழ் காலில் வெட்டியதாக உள்ளது. எதிரி அ.சா.1-ன் உயிரை பறிக்கக்கூடிய முக்கிய உடல் பாகத்தில் வெட்டவில்லை என்பது அ.சா.1 மற்றும் மருத்துவ சாட்சிகள் மூலம் அறியமுடிகிறது. ஒருவரின் காலின் கீழ் பகுதியை வெட்டுவதால் மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக மருத்துவ சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆகையால் எதிரி அ.சா.1 ஐ கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலமும் எதிரியின் குற்ற செய்கையை அவரது குற்ற எண்ணத்துடன் தொடர்புபடுத்தி நிரூபணம் செய்யவில்லை. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச 307 பிரிவின் கீழ் எதிரியை தண்டிப்பது நீதியின்பால் உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(8.22)அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 3 சாட்சிகள் மூலம் எதிரி அ.சா.1 ஐ அருவாளால் வலது காலின் கீழ் பகுதியில் வெட்டி கால் தனியாக துண்டாகும் அளவிற்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1-ன் வலது கால் வெட்டப்பட்டது குறித்து அ.சா.1 அளித்துள்ள சாட்சியம் அ.சா.10 மற்றும் 12 மருத்துவர்களின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டு அ.சா.1-க்கு வலது காலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அ.சா.1 நீதிமன்றத்தில் தெளிவாக எதிரி தான் வைத்திருந்த கத்தியை எடுத்து வலது காலை வெட்டி கால் தனியாக வந்துவிட்டது என சாட்சியமளித்துள்ளார். அ.சா.2-ம் தான் சம்பவ இடம் வந்து பார்த்தபோது எதிரி அருவாளுடன் ஓடிக்கொண்டிருந்தார் என சாட்சியமளித்துள்ளார். எதிரியின் மற்றொரு மகனான அ.சா.3 -ம் தன் தம்பியான அ.சா.2 தன் மனைவியை தன் அப்பா வெட்டியதாக தன்னிடம் கூறியதாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் எதிரியும் அ.சா.2 மற்றும் 3-ம் தந்தை மகன்கள் ஆவார்கள். அ.சா.1 எதிரியின் மருமகள் ஆவார். எதிரி தரப்பில் அ.சா.1 எதிரி மீது பொய் புகார் கொடுப்பதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

(8.23)அ.சா.1-க்கு எதிரி மீது சம்பவம் நடைபெறாமல் பொய் புகார் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது அவரது சாட்சியத்தின் மூலம் அறியமுடிகிறது. எதிரியிடமிருந்து சா.பொ.1 அருவாள் கைப்பற்றியது குறித்து அ.சா.6 மற்றும் 7 கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாக இருந்து தெளிவாக சாட்சியமளித்துள்ளனர். அவர்களது சாட்சியம் நிராகரிப்பதற்கு தகுந்தவாறு குறுக்கு விசாரணையில் அவர்களது சாட்சியம் அமையவில்லை. பொதுவாக கிராமங்களில் அருவாளை கொடுவாள், கத்தி என அழைப்பார்கள் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டுள்ளார். மேலும் சிறு சிறு முரண்பாடுகள் அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் இல்லை என வாதிட்டார். காயம்பட்ட நபர் தன்னை எதிரி எந்த ஆயுதத்தால் தாக்குகிறார்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:10 +0530

என்பதை சம்பவ சமயத்தில் உற்று கவனிக்க அவருக்கு சம்பவத்தில் ஏற்பட்ட முன் காயங்களின் படி வாய்ப்புகள் குறைவாக உள்ளது. அ.சா.1 எதிரி தன்னை முதலில் தாக்கியபோது தனக்கு வலதுபுற கண்ணில், உதட்டில், காயமடைந்து மயக்கநிலை ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார். பிறகு எதிரி இடுப்பில் வைத்திருந்த கத்தியால் காலை வெட்டியதாக தெரிவித்துள்ளார். அருவாள் என்பதை கத்தி என அ.சா.1 நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததால் மட்டுமே அ.சா.1-ன் சாட்சியத்தை நிராகரிக்க இயலாது. அ.சா.2 எதிரி அருவாளுடன் சம்பவ இடத்திலிருந்து சென்றார் என தெளிவாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் சம்பவம் பகல் நேரத்தில் நடைபெற்றுள்ளது. காயம் அடைந்த நபர் எதிரியின் உறவினர், எதிரியை அ.சா.1 நீதிமன்றத்தில் அடையாளப்படுத்தி சாட்சியமளித்துள்ளார். எதிரி வெட்டியதால் தான் தனக்கு வலது கீழ் காலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்பதை தெளிவாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(8.24)பார்வை மகசரில் உள்ள சம்பவ இடத்தின் அருகிலுள்ள வீடுகளில் இருந்தவரை விசாரித்து அவர்களை சாட்சியாக சேர்க்காததால் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என எதிரி தரப்பில் மேற்கொண்டுள்ள வாதம் ஏற்புடையதாக இல்லை. அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் தான் கைரேகை வைத்துள்ளதாக தெளிவாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து பெற்றதாக அளித்துள்ள குறுக்கு விசாரணை சாட்சியம் வழக்கு புகார் வாக்குமூலத்தின் மீது சந்தேகப்படும்படி இல்லை. மருத்துவர் சாட்சியங்கள் அ.சா.1-க்கு ஏற்பட்ட கொடுங்காயங்கள் அருவாள் போன்ற ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் CDJ 2010 SC 802 Abdul sayeed and others Vs. State of Madhya Pradesh என்ற வழக்கின் முன் தீர்ப்பில் பத்தி 28-ல் 28. “The law on the point can be summarized to the effect that the testimony of the injured witness is accorded a special status in law. This is as a consequence of the fact that the injury to the witness is an inbuilt guarantee of his presence at the scene of the crime and because the witness will not want to let his actual assailant go unpunished nearly to falsely implicate a third party for the commission of the offence. Thus the deposition of the injured witness should be relied upon unless there are strong grounds for rejection of his evidence on the basis of major contradiction and the discrepancies therein.” என தெரிவித்து காயம்பட்ட சாட்சியின் சாட்சியத்தை தகுந்த காரணங்கள் இல்லாமல் நிராகரிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2015 (1) MLJ (Crl) 623 (SC)- Jage Ram and others Vs. State of Haryana என்ற வழக்கில், பத்தி 9-ல் “The evidence of PW5 and PW6 are humbly corroborated by medical evidence. PW5 and PW6 being injured witness, their evidence is entitled to great weight. Cogent and

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:17 +0530

convincing grounds are required to discשrd the evidence of injured witnesses. In the light of the fact that PW5 and PW6 were injured witnesses, court below tested their evidence for its credibility and recorded concurrent findings that PW5 and PW6 are trust worthy witnesses, We find no reason to take a different view." என காயம்பட்டவரின் சாட்சியமும், மருத்துவர் சாட்சியமும், காயங்கள் பொறுத்து ஒத்தி அமைந்துள்ளது காயம்பட்டவரின் சாட்சியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும், காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து சம்பவ சாட்சிகள் அளித்துள்ள சாட்சியம் கோர்வையாகவும், தெளிவாகவும் இருக்கும் சமயத்தில் அவர்களது சாட்சியத்தை ஏற்று தீர்ப்பு பிறப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இந்த வழக்கில் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை கொண்டு தனது வலது கீழ் காலில் வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்திவிட்டார் என சாட்சியமளித்துள்ளதை மருத்துவ சாட்சிகள் உறுதி செய்து காயச்சான்றிதழ் மற்றும் விபத்து பதிவேடு வழங்கியுள்ளதால் அ.சா.1-ன் மேற்படி சாட்சியம் நம்பகத்தன்மையுடன் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(8.25)அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 12 சாட்சிகளின்படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள 294(b), 323, 307, இதச பிரிவுகளின் படி எதிரியை தண்டிக்க போதுமான சாட்சியங்கள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரி அ.சா.1 ஐ வழிமறித்து மரணத்தை விளைவிக்கும் ஆயுதம் மூலம் கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்பதால் எதிரிக்கு இதச 341, 326-ன் படி தண்டனை வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரியின் குற்ற செய்கை அ.சா.1 -க்கு மரணத்தை விளைவிக்கும் வகையில் ஏற்பட்டது என்பது குறித்து அ.சா.1 வழக்கு சம்பவத்திற்கான எதிரியின் குற்ற எண்ணம் முன்விரோதம் குறித்து நீதிமன்றத்தில் சாட்சியளிக்காததாலும், எதிரி அ.சா.1 -ன் வலது காலில் அருவாளால் வெட்டியுள்ளதால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச 307 பிரிவின் கீழ் எதிரிக்கு தண்டனை வழங்கப்படவில்லை. இவ்வழக்கில் எதிரி அ.சா.1 ஐ அபாயகரமான ஆயுதமான அருவாளை கொண்டு எதிரி வலது கீழ்காலில் துண்டாகவிட்ட நிலையில் வெட்டியும், கீழ்காலில் உள்ள நரம்புகள் இரத்த குழாய்கள் இரண்டு எலும்புகள் துண்டாகி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்பது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு சட்டப்பிரிவு இதச 341, 326-ன் கீழ் தண்டனை வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(8.26)ஆகவே இவ்வழக்கில் எதிரி இதச பிரிவுகள் 341, 326-ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால் எதிரிக்கு வழங்கக்கூடிய தண்டனை குறித்து கு.வி.மு.ச பிரிவு 235(2)-ன் கீழ் வினா வினவியபோது எதிரி கீழ்கண்டவாறு பதிலளித்தார்.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:23 +0530

**“நான் வயதானவர். என் மகன்களுக்கு என்னுடைய சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டு தனியாக கஷ்டப்பட்டு வருகிறேன். எனக்கு உடல்நிலை சரியில்லை. குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.”**

இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்ததில் அ.சா.1 ராதிகா என்பவரை எதிரி சா.பொ.1 அருவாளால் வலது கீழ் காலில் வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்தி அ.சா.1 மருத்துவமனையில் 04.07.2022 முதல் 20.07.2022 -ம் தேதி வரை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டு வீடு திரும்பியுள்ளார் என்பதை கவனத்தில் கொண்டும் எதிரியும், அ.சா.1-ம் உறவினர்கள் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கு சம்பவம் ஏற்பட தெரிவித்த காரணத்தை கருத்தில் கொண்டும், எதிரியின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டும் அவர் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டியதை கவனத்தில் கொண்டும் கீழ்கண்ட தண்டனையை எதிரிக்கு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, எதிரி மீதான இதசு பிரிவுகள் 341, 326-ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து இ.த.ச பிரிவு 341 -ன் கீழ் எதிரிக்கு 1 மாதம் சிறைதண்டனையும், இ.த.ச. பிரிவு 326-ன் கீழ் எதிரிக்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் ரூ.2000/- அபராதமும் அபராதத்தை கட்டத் தவறினால் 3 மாதங்கள் சிறைத்தண்டனையும், விதித்து கு.வி.மு.ச.பிரிவு 235(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மீது வனையப்பட்ட இதச சட்டப்பிரிகள் 294(b), 323, 307 -ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை விடுதலைசெய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சிறையில் இருந்த 05.07.2022 முதல் 31.01.2023 வரையிலான காலகட்டத்தை மேற்படி தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச 428-ன் படி கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும் மேற்படி இரண்டு பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட தண்டணையும் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் R.P.No.2/2024-ல் கைப்பற்றப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 47 cm நீளமுள்ள அருவாள் -1 (அதில் மர கைப்பிடி நீளம் 18cm, இரும்பு பூன் 5 cm, அருவாளின் இரும்பு பகுதி 24 cm), சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இரத்தம் படிந்த கருங்கல் -1 ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:29 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:34 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | - | ராதிகா |
| அ.சா.2 | - | செல்லதுரை |
| அ.சா.3 | - | சரவணன் |
| அ.சா.4 | - | செல்லமுத்து |
| அ.சா.5 | - | தமிழ்பாண்டியன் |
| அ.சா.6 | - | சதீஸ்வரன் |
| அ.சா.7 | - | பன்னீர்செல்வம் |
| அ.சா.8 | - | துரைசாமி |
| அ.சா.9 | - | பிரகாஷ் (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.10 | - | சுப்ரமணியன் (மருத்துவர்) |
| அ.சா.11 | - | செந்தில்குமார் (காவல் ஆய்வாளர்) |
| அ.சா.12 | - | குமார் (மருத்துவர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | - | புகார் |
| அ.சா.ஆ.2 | - | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து (பன்னீர்செல்வம்) |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | - | முதலாவது கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து (பன்னீர்செல்வம்) |
| அ.சா.ஆ.4 | - | பார்வை மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து (துரைசாமி) |
| அ.சா.ஆ.5 | - | இரண்டாவது கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து (துரைசாமி) |
| அ.சா.ஆ.6 | - | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | - | அட்லஸ் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | - | அட்லஸ் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | - | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.10 | - | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | - | இரண்டாவது கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.12 | - | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.13 | - | 1 வது கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.14 | - | படிவம் 91 |
| அ.சா.ஆ.15 | - | படிவம் 91 |
| அ.சா.ஆ.16 | - | சீனிவாசன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் - இல்லை.**

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:39 +0530

**<u>அரசு தரப்பு சான்று பொருள்கள் ..</u>**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | - | சுமார் 47 cm நீளமுள்ள அருவாள் -1 (அதில் மர கைப்பிடி நீளம் 18cm, இரும்பு பூன் 5 cm, அருவாளின் இரும்பு பகுதி 24 cm), |
| சா.பொ.2 | - | இரத்த கறைபடிந்த கருங்கல் |

**<u>குறிப்பு ..</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையிலிருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3. சாட்சிகள் யாரும் மூன்று முறைக்கு மேல் விசாரணை இன்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.

4. எதிரி இதச சட்டப்பிரிவு 341-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து அதற்கு 1 மாத காலம் சிறைத்தண்டனையும், இதச சட்டப்பிரிவு 326-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து 3 வருடங்கள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது மற்றும் அபராதமாக ரூ.2,000/- விதிக்கப்பட்டது.

5. எதிரி அபராத தொகை ரூ.2,000/- செலுத்திவிட்டார்.

6. எதிரி இதச சட்டப்பிரிவுகள் 294(b), 323, 307-ன் கீழ் குற்றவாளி இல்லை என விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டார்.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.06.30 18:01:46 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**துறையூர்.**